අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/1/21/6/4 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2019.01. 22

சுற்றறிக்கை இலக்கம் :-02/2019

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அதிபர்கள்,

**பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு வேலைத்திட்டம்**

இது தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள 2007/21 இலக்கம் கொண்ட 2007.10.08 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு அப்பால் இச்சுற்றறிக்கை இதற்குப் பின்னர் அமுலில் இருக்கும்.

ஒருவரின் முழுமையான சுகாதார ஆரோக்கியம் பல பிரிவுகளில் தங்கியிருப்பதுடன் உடல் உள சமூக மற்றும் ஆன்மீக ஆரோக்கியம் என இவற்றை வகைப்படுத்த முடியும். சுகாதார வளம்மிக்க சந்ததியினரை சமூகத்திற்குக் கையளிப்பதற்காக இச்சகல பிரிவுகள் தொடர்பிலும் ஒரே முறையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இதற்கான ஆரம்பத்தை வழங்கக்கூடிய ஒரேயொரு இடம் பாடசாலையாகும்.

பாடசாலை வளாகத்தில் மாணவர்களின் முழுமையான சுகாதாரத்தை விருத்தி செய்யக்கூடிய ஊக்குவிப்புப் தளமாக மாற்றியமைப்பதற்காக பாடசாலை சமூகத்தில் கூடுதலான கவனத்தை ஈர்க்கச் செய்து பாடசாலை ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் செயற்பாடுகளை விருத்தி செய்வதும் இவ் வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதற்கமைய பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பாடசாலைகளின் நலன்விரும்பிகளின் ஒத்துழைப்பினைப் பெற்று பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது அதிபரின் பொறுப்பாகும்.

**2.0. மேற்கூறப்பட்ட பிரதான இலக்கினை எட்டுவதற்காக கீழுக் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் கட்டாயமாக பாடசாலைகளினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

2.1. சுகாதார ஊக்குவிப்புக் கொள்கையினை வகுத்தல்.
2.2. பாடசாலை மாணவர்களின் சுகாதார ஊக்குவிப்பு அறை மற்றும் தேர்ச்சியினை உருவாக்குதல்.
2.3. பாடசாலைகளின் சுகாதார ஊக்குவிப்பிற்காகப் பொருத்தமான சூழலை ஏற்படுத்தல்.
2.4. பாடசாலை சுகாதார விருத்திக்காக பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலையின் சமூகத்தின் பங்கேற்பினைப் பெற்றுக் கொள்ளல்.
2.5. சுகாதார அமைச்சின் உதவியுடன் நடாத்தப்படும் பாடசாலை சுகாதார சேவை, சுகாதார ஊக்குவிப்பிற்காக பயன்மிக்கதாகப் பயன்படுத்தல்.

**3.0. பாடசாலைகளில் உளவளத்தை பேணுவதை உக்குவிப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது கவனம் செலுத்த வேண்டிய அடிப்படை அம்சங்கள்.**

3.1. வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்செயல்கள் அற்ற பிள்ளைகளுக்குப் பொருத்தமான சூழலைக் கட்டியெழுப்புதல்.
3.2. பாடசாலை வளாகத்தை அழகுபடுத்தல், பாதுகாத்தல் மற்றும் கவர்ச்சிமிக்கதாக பேணல்.
3.3. மலசலகூடங்கள் போதியளவு காணப்படல் மற்றும் அவற்றை சுத்தமாகப் பேணல்.
3.4. குடிநீர் வசதிகளைப் பேணல்.
3.5. மாணவர் சுகாதாரத் தரம் மற்றும் போசாக்குத் தரம் தொடர்பில் மதிப்பீடு செய்து தேவையான வழிகாட்டல்களை வழங்கல்.
3.6. பாடசாலை மாணவர்களுக்கு விருப்பத்திற்குரிய மனோவியல் சமூக சூழலைக் கட்டியெழுப்புதல்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister +94112784832 +94112784825 education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary +94112784811 +94112785162 secretary.education@moe.gov.lk

3.7. சகல மாணவர்களுக்கும் பாடசாலைகளில் சமமான சந்தர்ப்பங்கள் மற்றும் வாய்ப்புக்கள் காணப்படல்.

3.8. சகல பிள்ளைகளுக்கும் பாடசாலைக்கு வருவதற்குள்ள உரிமையை உறுதிசெய்தல்.

## 4.0. வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல் மற்றும் மேற்பார்வைகள்

இவ் வேலைத்திட்டத்தை அமுல்படுத்தும் போது பாடசாலைகள் மற்றும் அதற்குரிய ஏனைய நிறுவனங்களில் வெற்றிகரமான முறையில் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஏற்கனவே பாடசாலைகள் மற்றும் வலய மற்றும் மாகாண மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு மாணவர் கழகம் மற்றும் சுகாதார ஊக்குவிப்பு ஆலோசனைக் குழு கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு மறுசீரமைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும்.

### 4.1. பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு மாணவர் கழகம்

பாடசாலை சுகாதார ஊக்குவிப்புச் செயற்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக சுகாதார மேம்பாட்டு மாணவர் கழகம் தாபிக்கப்பட வேண்டும். இதன்போது ஆரம்ப மற்றும் இடைநிலைப் பிரிவுகளுக்காக தனித்தனியாக சுகாதார ஊக்குவிப்புக் கழகங்களைத் தாபிப்பது பொருத்தமானதாகும். பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு மாணவர் கழகங்களின் சகல பதவிகள் மற்றும் பொறுப்புக்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

4.1.1. உள்ளீடு

- தலைவர், இணைச் செயலாளர்கள், பொருளாளர், செயற்குழு சபை பாடசாலை சுகாதார மேம்பாட்டு மாணவர் கழகத்தின் உள்ளீடு என்பதுடன், இப்பதவிகள் சகல மாணவர்களுக்காகவும் திறக்கப்பட்டுள்ளது.

4.1.2. பொறுப்புக்கள்

- பாடசாலைக்கு பொருத்தமான சுகாதார மேம்பாட்டுக் கொள்கையொன்றை தயாரித்தல்
- பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு தொடர்பில் வருடாந்தம் திட்டங்களை வகுத்து பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு ஆலோசனைக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு அமுல்படுத்தல்.
- மாதாந்தக் கூட்டங்களை நடாத்தி உரிய சுற்றறிக்கையின் முன்னேற்ற மீளாய்வுகள் மற்றும் திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- சுகாதார ஊக்குவிப்பு மதிப்பீட்டு ஒப்பளவுகளுக்கமைவாகத் தேவையான செயற்பாடுகளை அமுல்படுத்தல்.
- பாடசாலை சுகாதார தினத்தை நடாத்துதல்.

### 4.2. பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு ஆலோசனைக் குழு

4.2.1. உள்ளீடு

- அதிபர் (தலைவர்), சுகாதார வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர்/ பிரிவுப் பொறுப்பாளர்/ உரிய ஆசிரியர்கள்
- ஆரம்பப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதி அதிபர் / பிரிவுப் பொறுப்பாளர்
- ஆசிரியர்கள் உயர்ந்தபட்சம் 03 பேர் (மாணவர் எண்ணிக்கைக்கு அமைய நியமிப்பதற்கு அதிபர்களுக்கு வாய்ப்பு உள்ளது.)
- சுகாதார மற்றும் உடற்கல்வி/ ஆலோசனை/ உயிரியல் தேர்ச்சி/ விஞ்ஞான அல்லது ஏனைய ஆசிரியர்களைப் பயன்படுத்த முடியும்.
- மாணவர் பிரதிநிதிகள் - பாடசாலை சுகாதாரக் கழகத்தின் தலைவர்/ பொதுச் செயலாளர் மற்றும் பொருளாளர்/ மாணவர் பாராளுமன்றத்தின் சுகாதார மற்றும் போசாக்குக்குப் பொறுப்பான அமைச்சர்
- பெற்றோர் பிரதிநிதிகள் (உயர்ந்த பட்சம் 5 பேர்)
- பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
- வெளி நலன்விரும்பிகள்

4.2.2. பொறுப்பு

- பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு மாணவர் கழகங்களின் செயற்பாடுகளுக்காக வழிகாட்டல் வேலைத்திட்டங்களின் மேற்பார்வை மற்றும் மீள்ஊட்டல்களை மேற்கொள்ளல்.
- 3 மாதகால கூட்டங்களை நடாத்தி பாடசாலை சுகாதார ஊக்குவிப்பிற்காக சமர்ப்பித்தல்.
- செயற்பாட்டு சமூகப் பங்களிப்பினை சுகாதார ஊக்குவிப்பு வேலைத் திட்டங்களுக்குப் பெற்றுக் கொள்ளல்.

## 4.3. வலய கல்வி சுகாதார ஊக்குவிப்புக் குழு

4.3.1. உள்ளீடு

- வலயக் கல்விப் பணிப்பாளர் (தலைவர்)
- வலய சுகாதார வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்/ உதவிக் கல்விப் பணிப்பாளர்
- வலய ஆரம்பப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்
- வலயத்தின் விசேட கல்விக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்
- வலயத்தின் ஆலோசனை விடயத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்
- வலயத்தின் விளையாட்டு மற்றும் உடற்கல்வி விடயத்துக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்
- மாவட்ட சமூக வைத்திய நிபுணர் (தாய் சேய் நலம்)
- தாய்-சேய் நல வைத்திய உத்தியோகத்தர் 01
- சுகாதார வைத்திய அதிகாரி (மனோவியல் சுகாதாரம்) 01
- சுகாதார வைத்திய அதிகாரிகள் (வலயத்திற்குரிய சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம்)
- கோட்டத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள்
- பிரதேச நிறுவன பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்
- சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்கள்

4.3.2. பொறுப்புக்கள்

- மூன்று மாதகாலத்துக்கு ஒருமுறை வலயக் கல்வி மட்டத்தில் கூட்டங்களை நடாத்தி பாடசாலை சுகாதார ஊக்குவிப்பிற்குரிய செயற்பாடுகளின் மதிப்பீடு மற்றும் மேற்பார்வை
- பாடசாலை வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்காக தேவையான மீள்ஊட்டல்களைப் பெற்றுக் கொள்ளல்.
- தேவையான துணைச் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மதிப்பீடுகளின் போது தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல விருது சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட பாடசாலை ஆவணங்களை மாகாணக் குழுவிற்கு மற்றும் கல்விச் செயலாளருக்கு வழங்குதல்.

## 4.4. மாகாண சுகாதார ஊக்குவிப்புக் குழு

4.4.1. உள்ளீடு

- மாகாணக் கல்விச் செயலாளர் (தலைவர்)
- மாகாண சுகாதாரச் செயலாளர்
- மாகாணக் கல்விப் பணிப்பாளர்
- மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்
- பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்
- மாகாண/மாவட்ட சமூக வைத்திய நிபுணர் (தாய்-சேய் நலம்)
- மாகாண சுகாதார வேலைத்தித்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்

- மாகாண போசாக்கு வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்
- மாகாணத்தின் விளையாட்டு மற்றும் உடற்கல்வி விடயத்துக்குப் பொறுப்பான பிரதி.'. உதவிக் கல்விப் பணிப்பாளர்
- மாகாண திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்
- மாகாண ஆரம்பக் கல்விப் பணிப்பாளர்கள்
- மாகாண விசேட கல்விப் பணிப்பாளர்கள்
- மாகாண ஆலோசனை வேலைத்திட்டங்களுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்
- கணக்காளர் (மாகாணக் கல்வித் திணைக்களம்)

4.4.2. பொறுப்புக்கள்

- தேசிய கொள்கைக்கமைய மாகாண மட்டத்தில் சுகாதார ஊக்குவிப்பு குழுவினைத் தீர்மானித்தல்.
- வருடத்திற்கு இரண்டு தடவைகள் கூட்டங்களை நடாத்தி மாகாண மட்டத்தில் பாடசாலை சுகாதார ஊக்குவிப்பிற்கு உரிய செயற்பாட்டு மதிப்பீடு மற்றும் முன்னோடிப் பணிகள்.
- கூட்ட அறிக்கை தேசிய மட்ட குழுவுக்கு அனுப்புதல்
- பாடசாலை வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்காக தேவையான மீள்ஊட்டல்களை வழங்குதல்.

## 4.5. தேசிய மட்டத்தில் சுகாதார ஊக்குவிப்பு வழிகாட்டல் குழு

4.5.1. உள்ளீடு

- கல்வி அமைச்சின் செயலாளர்
- சுகாதார அமைச்சின் செயலாளர்
- சுகாதார அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள்
- தகவல் ஊடகத்துறை மற்றும் தகவல் அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்பட்ட உத்தியோகத்தர்
- கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (கல்விப் பண்புசார் விருத்தி)
- கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (கொள்கைத் திட்டமிடல் மற்றும் செயற்சாதனை மீளாய்வு)
- கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர்
- குடும்ப சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர்
- சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தின் பணிப்பாளர்
- தேசிய உளவள சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர்
- பணிப்பாளர் (தொற்றா நோய்ப் பிரிவு)
- குடும்பநல பணியகத்தின் பாடசாலை சுகாதார வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பான வைத்திய நிபுணர்
- கல்வி அமைச்சின் சுகாதார மற்றும் போசாக்கு வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்
- கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விப் பணிப்பாளர்
- கல்வி அமைச்சின் முறைசாரா மற்றும் விசேட கல்விப் பணிப்பாளர்
- கல்வி அமைச்சின் விளையாட்டு மற்றும் உடற்கல்விப் பணிப்பாளர்
- கல்வி அமைச்சின் பாடஇணை வழிகாட்டல் மற்றும் ஆலோசனைப் பணிப்பாளர்

4.5.2. பொறுப்புக்கள்

- தேசிய மட்டத்தில் பாடசாலை சுகாதார ஊக்குவிப்புக் கொள்கையினை தீர்மானித்தல்.
- ஆண்டுக்கு இரண்டு தடவைகள் கூட்டங்களை நடாத்தி பாடசாலை சுகாதார ஊக்குவிப்புக்குரிய செயற்பாட்டு மதிப்பீட்டு மற்றும் முன்னோடிப் பணிகள்
- பாடசாலை வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்காக தேவையான மீள்ஊட்டல்களை வழங்குதல்.